# வள்ளலாரின் வாழ்வும் சாகாக்கலையும்

தமிழ்நாட்டில், கடலூர் மாவட்டத்தில், சிதம்பரத்திற்கு அருகில் மருதூர் என்ற கிராமத்தில், அரசாங்க கணக்காளராக (கர்ணம்) இராமையா பிள்ளை என்பவர் பணியாற்றி வந்தார். அவர், ஐந்து முறை திருமணம் செய்தும் குழந்தையின்றி, ஒவ்வொரு மனைவியும் இறந்துவிட்டனர். இராமையாபிள்ளை ஆறாவதாக, திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரிக்கருகிலுள்ள சின்னக்காவணம் என்ற கிராமத்தைச் சேர்ந்த சின்னம்மாளைத் திருமணம் செய்து கொண்டார். சின்னம்மாளுக்கு மூன்று ஆண்கள் இரண்டு பெண்கள் (சபாபதி, பரசுராமன், சுந்தரம்மாள், உண்ணாமலை, இராமலிங்கர்) ஆக மொத்தம் ஐந்து குழந்தைகள் பிறந்தனர். அவர்களுள் ஐந்தாவது குழந்தையாகப் பிறந்தவரே இராமலிங்கர். இவர் 5– 10– 1823 (சுபானு ஆண்டு, புரட்டாசி மாதம், சித்திரை நட்சத்திரம்) ஞாயிற்றுக்கிழமை மாலை 5.54 மணிக்கு உலகில் தோன்றினார்.

இராமலிங்கர் பிறந்த ஆறு மாதங்களுக்குள் தந்தை இராமையாப் பிள்ளை இறைவனடி சேர்ந்து விட்டார். ஆகவே, சின்னம்மாள் தன் ஐந்து பிள்ளைகளையும் அழைத்துக் கொண்டு தன் தாய் வீடான சின்னக்காவணத்திற்குச் சென்றார். மூத்த மகனான சபாபதிப் பிள்ளை, புராணப் பிரசங்கம் செய்து வருவாய் ஈட்டத் தொடங்கினார்.

இராமலிங்கருக்கு இரண்டு வயதாகும் போது, 1826ல், சபாபதிப்பிள்ளை தாயாரையும் உடன் பிறந்தோரையும் அழைத்துக் கொண்டு, சென்னை, ஏழு கிணறு, வீராசாமிப்பிள்ளைத் தெரு, பழைய கதவு எண் 39 உள்ள வீட்டில் குடியேறினார். அண்ணன் சபாபதிப் பிள்ளையே, இராமலிங்கருக்கு, ஐந்து வயது முதல் ஒன்பது வயது வரையில் (1828 – 1832) நான்காண்டு காலம் கல்வி கற்பித்தார்.

இராமலிங்கர், அண்ணனிட மிருந்து கற்ற ஆரம்பக் கல்வியைக் கொண்டே, தேவாரம், திருவாசகம், திருக்குறள், திருமந்திரம், ஞான வெட்டியான் ஆகிய நூல்களைப் பொருளுணர்ந்து இசையோடு பாடும் திறன் பெற்றார். மேலும், ஒன்பது வயதிலேயே தாமே பாடல்களை இயற்றும் ஆற்றலையும் பெற்றவராக விளங்கினார்.

இராமலிங்கருக்கு ஒன்பது வயது முடியுமுன்னால், அவர் தன் தாயாரோடு சிதம்பரம் நடராஜப் பெருமான் திருமுன்னர் நின்றபோது பிறர் கண்களுக்குத் தோன்றாத ஓர் அற்புதம் நிகழ்ந்தது. அதை அவர் விவரிப்பதைக் கேட்போம் :–

*ஆக்கி அளித்தல் முதலாம் தொழில் ஓர் ஐந்தினையும்*
*தேக்கி அமுதொடு நீ செய் என்றான் - தூக்கி எடுத்தான்;*
*அணைத்தான்; இறவாத தேகம்*
*கொடுத்தான் சிற்றம் பலத்து என்கோ !*

*- திருமுறை 6/88 பாமாலை ஏற்றல்-12.*

பொருள் :

சிதம்பரத்தில் விளங்கும் என் அரசனாகிய சிவபெருமான் என்னைத் தூக்கி எடுத்தான்; அணைத்தான்; இறவாத தேகம் அளித்தான். ஆக்கல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழில்களையும் நீ செய்க என்று அருள் புரிந்தான்.

சிதம்பரத்தில் விளங்கும் நடராஜப்பெருமான் சிறுவராயிருந்த இராமலிங்கரின் தூல உடலிலிருந்து சூக்கும உடலை வெளிவரச் செய்தான். உயரமான பொன்னம்பல மேடையின் கீழே நின்ற அந்த சிறிய ஒளி உருவத்தை சிவபெருமான் தன் திருக்கரத்தால் தொட்டுத்தூக்கி, தன் மார்போடு அணைத்துக் கொண்டான், உலகில் தோன்றிய எந்த ஞானிக்கும் ஏற்படாத அதிசயம் இது. மேலும் தம்மைப் போல் ஐந்தொழில் புரியும் ஆற்றலையும் இராமலிங்கருக்கு அளித்தான். இக்காரணம் பற்றியே, அக்கால வழக்கப்படி பிறந்த ஊரான மருதூரைத் தன் பெயருக்கு முன்னால் வைக்காமல், சிதம்பரம் இராமலிங்கம் என்று கைஎழுத்திடலானார் என்பதை உலகம் உணருமாக!

ஒன்பது வயதுச் சிறுவராயிருந்த இராமலிங்கர், சென்னையில் வசித்த வீட்டின் மாடியிலுள்ள சிறிய அறையில் அமர்ந்து தியானம் செய்யத் தொடங்கினார். சிவ ஞானப் பழமாகிய முருகப் பெருமான் இதைக்கண்டு உள்ளம் கனிந்தார்.

விண்ணிலிருந்து வந்தவர் மண்ணில் எவரையும் குருவாகத் தேடலாகாது என்று நினைத்து, தாமே முதல் குருவாகி அவரை ஆட் கொண்டார் என்பதை, அய்யா அவர்கள் இவ்வாறு விளக்குகின்றார்கள் :–

*இல்லை எனப் பிறர்பால் சென்று இரவா வண்ணம்*
*ஏற்ற மளித்தாய் இரக்கம் என்னே என்னே*
*செல்ல அருட் குருவாகி நாயினேனைச்*
*சிறுகாலை ஆட்கொண்ட தேவ தேவே!*

*- திருமுறை 5/4, திருவருள் விலாசப்பத்து-4.*

எவ்வாறு ஆட்கொண்டார் ?

இதோ, இராமலிங்கர் கூறும் விடையைக் கேளுங்கள்:–

*சீர்கொண்ட தெய்வ வதனங்கள் ஆறும், திகழ் கடப்பம்,*
*பார்கொண்ட பன்னிரு தோள்களும் தாமரைத் தாள்களும், ஓர்*
*கூர் கொண்ட வேலும் மயிலும் நற்கோழிக் கொடியும், அருட்*
*கார் கொண்ட வன்மைத் தணிகாசலமும் என் கண்ணுற்றதே!*

*- திருமுறை 5/5 பிறர்த்தனை மாலை-1.*

ஒரு நாள் இரவு, ஒன்பது வயது சிறுவராகிய இராமலிங்கர் கண்மூடி அமர்ந்திருக்கின்றார். அப்போது அவர்கண் முன்னால் கோடி சந்திரப் பிரகாச ஒளி தோன்றியது.

அந்த ஒளியின் நடுவில் முருகப் பெருமான் தோன்றினார்!

எவ்வாறு தோன்றினார் ?

மயிலின் மீது அமர்ந்த கோலத்தில் தோன்றினார்! ஆறுமுகமும், கடம்ப மாலையும், பன்னிரு தோள்களும், தாமரைத் தாள்களும், வேலும், சேவற் கொடியும் விளங்கிடத் தோன்றி ஆசீர்வதித்தார். என்னே அற்புதக் காட்சி!

இராமலிங்கப் பெருமானார் தொடர்ந்து தியானம் செய்து வரலானார். அவருக்குப் பன்னிரண்டு வயது நடந்து கொண்டிருந்தது. ஒரு நாள் மாலை நேரம். சென்னை வீராசாமிப் பிள்ளை தெருவில் இராமலிங்கர் தன் தோழர்களோடு விளையாடிக் கொண்டிருந்தார். அப்போது சிவபெருமான் அங்கு தோன்றி, எவரும் அறியாதவாறு இராமலிங்கர் கழுத்தில் சிவ மாலை ஒன்றை அணிவித்தார் :–

*தெருவிடத்தே விளையாடித்திரிந்த என்னை வலிந்தே*
*சிவமாலை அணிவித்தனை அச்சிறு வயதில் ....*

*-திருமுறை 6/30 பிரியேன் என்றல்-9.*

பின்னர், சிவபெருமானே நேரில் தோன்றி இராமலிங்கருக்கு உபதேசம் செய்ததைப் பற்றிய ஒரு பாடலை மட்டும் இங்கு காண்போம் :–

*சுற்றது மற்று அவ்வழிமா சூதது என்று எண்ணாத்*
*தொண்டரெல்லாம் கற்கின்றார்; பண்டும் இன்றும் காணார்*

*எற்றதும்பு மணி மன்றில் இன்படம் புரியும்*
*என்னுடைய துரையே ! நான் நின்னுடைய அருளால்*

*கற்றது நின்னிடத்தே ! பின் கேட்டது நின்னிடத்தே !*
*கண்டது நின்னிடத்தே ! உட்கொண்டது நின்னிடத்தே !*

*பெற்றது நின்னிடத்தே ! இன்புற்றது நின்னிடத்தே !*
*பெரியதவம் புரிந்தேன்; என்பெற்றி அதிசயமே !*

*- திருமுறை 4/1, அன்பு மாலை-16.*

பொருள் :

தவறான குரு கற்பிக்கின்ற ஆன்மீக வழி, மனிதனை சுற்றி விடுவது என்றும், அந்த வழி மிகவும் சூதானது என்றும் அறியாத தொண்டர்களெல்லாம், அவரிடமே தொடர்ந்து கற்கின்றார்கள். ஆனால், அன்றும், இன்றும், அவர்கள் தம்முடைய சூக்கும சரீரத்தையோ, அல்லது சிவலிங்க வடிவ ஜீவ ஜோதியையோ, கண்டதில்லை. ஒளி யுடைய மணி மன்றில் இன்ப நடனம் புரியும் என் ஐயனே! நான் நின்னுடைய அருளால் நின்னிடமே கற்றேன்; நின்னிடமே கேட்டேன்; நின்னிடமே ஆன்மிக இரகசியங்களைக் கண்டேன்; நின்னிடமே அமிர்தம் உட்கொண்டேன்; நின்னிடமே முத்தி நிலை பெற்றேன்; நின்னிடமே பேரின்பம் உற்றேன். ஏனெனில், நின்னிடமே பெரிய தவம் புரிந்தேன். என்னுடைய பேறு அதிசயமேயாகும்!

குறிப்பு :–

இப்பாடலின் முதல் இரண்டு வரிகளை வாசகர்கள் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும்.

இராமலிங்கப் பெருமானார் எவ்வளவு காலம் தவம் பயின்றார் என்ற வினாவிற்கு அவரே கூறும் விடையைக் கேட்போம் :–

*ஈராறாண்டு தொடங்கி இற்றைப் பகலின் வரையுமே*
*எளியேன் பட்ட பாட்டை நினைக்கில்இரும்பும் கரையும்*

*ஏராய் அந்தப் பாடு முழுதும் இன்ப மாயிற்றே*
*இறைவாநின் மெய்யருள் இங்கு எனக்குச் சொந்தமாயிற்றே*

*- திருமுறை 6/112, மெய்யருள் வியப்பு - 79.*

இப்பாடலிலிருந்து, இராமலிங்கப் பெருமானார், சிவ பெருமானிடம் கற்ற உபதேசத்தின்படி, 12 வயதில் தவம் செய்யத் தொடங்கி, ஒரு நாள் பகலில், நிறைவு செய்தார் என்று அறிகிறோம். அவர் முத்தி என்ற நிலையை அடைந்தது (சுழுமுனை சுவாசம் பிரமரந்திரத்தினுள் நுழைந்து நெற்றிநடு நிலையிலுள்ள சூக்கும சரீரத்தை உயர்த்தி, மேலேயுள்ள சிவலிங்க வடிவ ஜீவஜோதியோடு இணைத்திட, உச்சிக் குழிதிறந்திட, சூக்கும சரீரம் மீண்டும் கீழே இறங்கி தன்னுடைய நிலைக்கு வந்து விடுவது) ஒருநாள் பகலில் என்று குறிப்பிட்டுள்ளார். அந்த நாள், நம்முடைய ஆய்விலிருந்து, 1850க்கு முன்னால் என்று தெரிகிறது. (அருட்பெருஞ்சோதி ஞானச் சித்தர் பக்கம் 65 – 69 பார்க்கவும்). ஆகவே, இராமலிங்கர் சுமார் 10 –15 ஆண்டுகள் சென்னையில் கடுந்தவம் புரிந்து முத்தி என்ற நிலையை அடைந்து, இதன் பின்னர் “சஞ்சார சமாதி” என்று சித்தர்கள் பரிபாஷையில் கூறுகின்றபடி இயல்பான மனித வாழ்க்கையில் ஈடுபட்டிருந்தார்.